[1978 பிப்ரவரி 28

மரவள்ளிக்கிழங்குக்கு நியாய விலை.

*318 வினா : திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி, பரவாக்கோட்டை, மேலவாசல் பகுதியில் பயிரிடப்படும் மரவள்ளிக்கிழங்குக்கு நியாயமான விலை கிடைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படும் விஸ்தீரணம் 95 ஏக்கர் மட்டுமேயாகும். விற்பனையில் எந்தவித கஷ்டமும் இல்லாததால் நடவடிக்கை யாதும் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மன்னார்குடி பகுதியில் அதிகமாக மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கிற வகையில்—தஞ்சை மாவட்டத்தில் வேறு தொழிற்சாலைகள் இல்லையென்ற காரணத்தாலும்—அங்கு விவசாயிகள் உற்பத்தி செய்கிற மரவள்ளிக்கிழங்கை கோவைக்கு எடுத்துச் சென்று அவர்கள் விற்பனை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது—மரவள்ளிக்கிழங்கைக் கொண்டு பல பொருள்கள் தயாரிக்கிற ஒரு ஆலையை மன்னார்குடி பகுதியில் நிறுவ அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்குத் தேவையான மூலப்பொருள் போதிய அளவிற்குக் கிடைக்க வேண்டும். அப்படி மூலப் பொருள் கிடைத்தால், அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருந்தால் இந்த அரசு உடனடியாகப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வத்தலக்குண்டு பழம் பதனிடும் தொழிற்சாலை.

*319 வினா : திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டுவில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்ட பழம் பதனிடும் தொழிற்சாலை தற்பொழுது செயல்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், காரணம் என்ன ?

1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) வத்தலகுண்டில் தனியாகக் கூட்டுறவுச் சங்கம் எதுவும் பழம் பதனீடும் தொழிலின் கீழ் செயல்படவில்லை. தமிழ் நாடு மாநில பனைவெல்ல கூட்டுறவு இணையம் அவ்வூரில் ஒரு பழம் பதனிடும் அலகு ஒன்றைச் செயல்படுத்தி வந்தது. அது இலாபகரமாகச் செயல்படாமையால் மூடப்பட்டு விட்டது.

திரு. ரா. கா. சு. தண்டபாணி: பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்ற இடங்களில் இப்படிப்பட்ட தொழிற்சாலை அமைக்கப்படுகிறதா அல்லது அதிகமாக விற்பனையாகின்ற அதாவது மார்க்கெட் இருக்கும் இடங்களில் ஏற்படுத்தப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், கிஸான் போன்று பழச்சாறுகளை பாட்டில்களில் தயாரித்துக் கொடுக்கும் திட்டம் ஏதாவது அரசினிடத்தில் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பழம் அதிகமாக உற்பத்தியாகின்ற இடங்களில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை வைப்பதுதான் லாபகரமாக இருக்கும் என்று காதி கிராமத் தொழில் வாரியம் முடிவு செய்திருக்கிறது. எங்கெல்லாம் பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன, எங்கெல்லாம் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம் என்று காதி தொழில் வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிஸான் போன்ற பதனிடப்பட்ட பழச்சாறு தயாரித்து அளிக்கும் திட்டம் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கிராம கைத்தொழில் வாரியம் பழங்களை பதனிடும் தொழிற்சாலைகளை இரண்டு மூன்று இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறது. இங்கிருந்து பழச்சாறு, ஜாம் போன்றவைகள் நல்லமுறையில் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன்: மலர்புரி என்று அழைக்கப்படுகிற நிலக்கோட்டை, திண்டுக்கல் பகுதியில் வாசனை நிறைந்த மல்லிகை, செவ்வந்தி, ரோஜா போன்ற மலர்கள் ஏராளம் கிடைக்கின்றன. இவைகளிலிருந்து எஸென்ஸ் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கலாம் என்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விவரங்கள் வந்திருக்கிறதா, அங்குள்ள மக்களிடமிருந்து இதற்கான கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா? அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி, பழங்களைப் பற்றியது, பூக்களைப்பற்றி அல்ல.

[1978 பிப்ரவரி 28

திரு. என். பழனிவேல் : பழனிப் பகுதியைச் சேர்ந்த ஆயக்குடியில் நல்ல முறையில் கொய்யா, மா, பலா போன்ற பழங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன என்பது அரசுக்கு நன்கு தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே அந்தப் பகுதியில் பழங்களைப் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் வற்புறுத்தி வருகிருர்கள். ஆகவே அங்கே பழங்கள் பதனிடும் ஒரு தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, எந்த எந்த இடங்களில் பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன என்கின்ற ஒரு குறிப்பை இப்போது காதி கிராமத் தொழில் வாரியம் தயாரித்து வருகிறது. இது முடிவு செய்யப்பட்ட பின்னல் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை எங்கெங்கு ஏற்படுத்தலாம் என்பதைப்பற்றி வாரியம் முடிவு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூரில் உள்ள நெசவு முதலிய கம்பெனிகள்.

* 320 வினு : திரு. கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகரில் உள்ள 370 நெசவு, பனியன், சாயக் கம்பெனிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அவைகளை திறக்கவும் தொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) முதல் (இ) வரை : விபரமான அறிக்கை @ சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இங்கு வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுத்திருக்கின்ற விவரங்கள் அல்லாமல் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கரூரில் இவர்களுக்குக்

@ 132ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.